## மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்

## கும்முடிப்பூண்டி

| | | |
|---|---|---|
| வழக்கு எண்: C.C. 197 / 2022 | காவல் நிலையம்: DCB திருவள்ளூர் | |
| பெயர் : கேசவன் | அ.சா. 2 | நாள் : 20.08.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா.2 என்பவரின் வாக்குமூலம் 1969ஆம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கேசவன் | தாலுக்கா | : | -- |
| தந்தை பெயர் | : | கணேசன் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | சோழவரம் | வயது | : | 54 |

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜராக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் ஜெகநாதபுரம் கிராமத்தில் கடந்த 50 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 40 வருடங்களாக விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு 10 ஏக்கர் சொந்தமாக விவசாயம் நிலம் உள்ளது. எனக்கு மகேஷ் என்ற ஒரு மகன் மட்டும் உள்ளார். அவர் பி.இ., இசிஇ என்ற பட்டப்படிப்பை கடந்த 2014ம் வருடம் படித்து முடித்துள்ளார். கடந்த 2014ம் வருடம் பொன்னேரி வருவாய் துறையில் வட்டாட்சியராக பணிபுரிந்து வந்த சின்ன கருப்பன் என்பவரை எனக்கு தெரியும். அதன் காரணமாக மேற்படி சின்ன கருப்பன் 2014ம் வருடம் (தேதி மாதம் ஞாபகமில்லை) எனக்கு அவருடைய அழைப்பேசி மூலம் எனக்கு போன் செய்தார். அப்போது அவர் என்னுடைய மகன் பி.இ., படித்துள்ளதால் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி பொறியாளர் பணிக்கு ஆள் சேர்ப்பதாகவும் கூறினார். அதற்கு அப்போது நான் அவரிடம் மேற்படி பதவிக்கு தேர்வு எழுத வேண்டுமே என்று அவரிடம் நான் சொன்னேன். அதற்கு அவர் என்னிடம் அவருடைய தம்பி அரவணை செல்வம் என்பவர் மின்சார துறையில் கண்காணிப்பாளராக வேலை பார்த்து வருவதாகவும், அவருக்கு உயர் அதிகாரிகளை நிறைய நபர்களை தெரியும் என்றும், அதன் காரணமாக அவர்களுடைய கோட்டாவின் என் மகனுக்கு மின்சார வாரியத்தில் உதவி பொறியாளர் வேலை வாங்கி தருவதாக சொன்னார். அதன் படி என்னுடைய உறவினரான கும்மிடிப்பூண்டியில் வசித்து வரும் சண்முகம் அவருடைய மகன் விக்னேஷ்க்கு உதவி பொறியாளர் வேலையும் மற்றும்

கோடம்பாக்கத்திலுள்ள தனலட்சுமிக்கு ஆசிரியர் வேலையும் வாங்கி தரும்படி சின்னகருப்பனிடம் கேட்டார்கள். இந்த வேலை சம்பந்தமாக நானும், தனலட்சுமியும், சண்முகமும் ஆலோசனை செய்து மேற்படி சின்னகருப்பன் எங்களிடம் கூறிய நம்பிக்கையின் அடிப்படையில் 2014ம் வருடம் செப்டம்பர் மாதம் (தேதி ஞாபகமில்லை) கும்மிடிப்பூண்டியில் உள்ள சண்முகம் என்பவருடைய வீட்டில் நான் என்னுடைய மகனின் வேலைக்காக ரூ.2 இலட்சம் ரொக்கத்தை சின்ன கருப்பனிடம் கொடுத்தேன். அப்போது அங்கிருந்த சண்முகம் அவருடைய மகன் விக்னேஷ்க்காக ரூ.4 இலட்சம் ரொக்கத்தை சின்ன கருப்பனிடம் கொடுத்தார். மேலும் தனலட்சுமி ஆசிரியர் வேலைக்காக ரூ.5 இலட்சம் ரொக்கத்தை சின்ன கருப்பனிடம் கொடுத்தார். மேலும் மேற்படி இடத்தில் எங்களை தவிர சண்முகத்தின் மனைவி மற்றும் மூத்த மகன் குமரேசன், அரவணை செல்வம் ஆகியோர்கள் இருந்தார்கள். அதன் பின்னர், 2014 ம் வருடம் நவம்பர் மாதம் நான் என்னுடைய மகனின் வேலைக்காக மேலும் ரூ.2 இலட்சம் ரொக்கமாகவும், மற்றும் சண்முகம் அவருடைய மகனுக்காக மேலும் ரூ.4 இலட்சமும் சண்முகம் வீட்டில் வைத்து சின்ன கருப்பன் மற்றும் அரவணை செல்வனிடம் கொடுத்தோம். அப்போதும் சண்முகத்தின் மனைவி மற்றும் மூத்த மகன் குமரேசன், ஆகியோர்கள் இருந்தார்கள். மீண்டும் மூன்றாவது தவணையாக 2014 ம் வருடம் டிசம்பர் மாதம் மீண்டும் என்னுடைய மகனின் வேலைக்காக மேலும் ரூ.2 இலட்சம் ரொக்கமாகவும், மற்றும் சண்முகம் அவருடைய மகனுக்காக மேலும் ரூ.7 இலட்சமும் சண்முகம் வீட்டில் வைத்து சின்ன கருப்பன் மற்றும் அரவணை செல்வனிடம் கொடுத்தோம். பணம் பெறும்போது 6 மாதத்தில் வேலை வாங்கி தருவதாக சின்ன கருப்பன் மற்றும் அரவணை செல்வமும் கூறினார்கள். ஆனால் 3 வருடங்கள் கடந்த பின்னரும் வேலை வாங்கி தரவில்லை. எனவே, பணத்தை திருப்பி தருமாறு அவரிடம் கேட்டோம். அப்போது சின்னகருப்பன் எங்களை மிரட்டல் தொனியில் பேசினார். எனவே, 25.02.2019ம் தேதி திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சண்முகம் புகார் கொடுத்தார். மேற்படி புகார் தொடர்பாக மாவட்ட குற்ற பிரிவு காவல் ஆய்வாளர் எங்களை விசாரணை செய்து அதை பதிவு செய்தார். மேற்படி சின்ன கருப்பனும் அரவணை செல்வமும் வேலை வாங்கி தருவதாக என்னையும், சண்முகம் மற்றும் தனலட்சுமியையும் ஏமாற்றி நம்பிக்கை மோசடி செய்துவிட்டார்கள். மேற்படி சின்னகருப்பன் மற்றும் அரவணைசெல்வத்தை என்னால் நீதிமன்றத்தில்

அடையாளம் காட்ட முடியும். (எதிரிகளின் அடையாளம் தொடர்பாக எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபனை ஏதும் இல்லை என தெரிவித்தார். எனவே, எதிரிகளை அடையாளம் காட்ட வேண்டிய அவசியம் எழவில்லை).

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எம்ஏ., எம்பில் படித்துள்ளேன். நான் முதுநிலை பட்டதாரி என்றாலும், இலஞ்சம் கொடுப்பது குற்றம் என்பது எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். ஒரு செயலை சட்டத்திற்கு புறம்பாக செய்ய தூண்டுவதும் குற்றம் என்றால் சரிதான். எனது மகன் பி.இ, இஇஇ படித்துள்ளார். தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தான் பணியாளர் நியமனம் செய்யப்படுகிறார்கள் என்றால் சரிதான். 2014ம் வருடம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உதவி பொறியாளர் பணிக்கு ஆள் சேர்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டதா என்றால் ஆமாம். மேற்படி அறிவிப்பு தொடர்பான ஆவணத்தை போலிசாரிடமோ, நீதிமன்றத்திலோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2014ம் வருடம் எனது மகன் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்திய தேர்வை எழுதினாரா என்றால் இல்லை. உதவி பொறியாளர் பணிக்கு தேர்வாணையம் மூலம் தேர்வு நடத்தப்பட்டு பின்னர் நேர்காணல் நடத்தப்பட்டு அதன் பின்னர் தான் பணி நியமனம் நடைபெறும் என்றால் சரிதான். எதிரிகளிடம் பணம் கொடுத்தது தொடர்பான ஆவணத்தை போலிசாரிடமோ, நீதிமன்றத்திலோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் புதுக்கோட்டை மலையூர் காவல் நிலையத்தில் அளித்துள்ளேன். மலையூர் காவல் நிலையத்தில் எந்த வருடம் எந்த தேதியில் புகார் அளித்தேன் என்றால் 2019ம் வருடம் அளித்தேன். மலையூர் ரமேஷ் என்பவரை எனக்கு தெரியும். மலையூர் ரமேஷ் தான் பணத்தை ஏமாற்றியதாக மலையூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 2014ம் ஆண்டு 2வது தவணையாக பணம் கொடுத்த தேதி நினைவு இல்லை, மாதம் மட்டும் நினைவு உள்ளது. மேற்படி பணத்தை பகல் 11 மணியளவில் கொடுத்தேன். வரவு செலவுகளை வங்கி மூலம் செய்து வருகிறேன் என்றால், வங்கி மூலமும் செய்வேன், பணமாகவும் செய்வேன். பெரிய தொகை வேண்டும் என்றால் வங்கியில் இருந்து தான் எடுத்து கொடுப்பேன் என்றால் வங்கியில் இருந்தும் எடுத்து கொடுப்பேன். கையில் உள்ள பணத்தையும் கொடுப்பேன். 1ம் எதிரி சின்ன கருப்பன் என்னிடம் எனது மகனுக்கு வேலை வாங்கி தருவதாக

கூறவும் இல்லை, என்னிடமிருந்து பணம் பெறவும் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரி மின்சார வாரியத்தில் அடிப்படை ஊழியராக பணி செய்து வருகிறார் என்றாலும், அவருக்கு பணி நியமன அதிகாரிகளுக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரி எனது மகனுக்கு வேலை வாங்கி தருவதாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். சண்முகம் மகனுக்கு வேலை வாங்கி தருவதாக 1ம் எதிரி என்னிடம் கூறவும் இல்லை, பணம் பெறவும் இல்லை, வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தனலட்சுமி அவர்களுக்கும் வேலை வாங்கி தருவதாக 1ம் எதிரி என்னிடம் கூறவும் இல்லை, பணம் பெறவும் இல்லை, வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பணத்தை திருப்பி தருவதாக கூறி மலையூர் ரமேஷ் எனக்கு காசோலை வழங்கினார் என்றால் என்னிடம் வழங்கவில்லை, சின்ன கருப்பனிடம் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்த போது, மலையூர் ரமேஷ் பற்றி நான் சொன்னேன் என்றால் நான் சொல்லவில்லை அவர்கள் கேட்காததால் நான் சொல்லவில்லை. பணம் கொடுக்கல் வாங்கலுக்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், நான் யாரிடமோ பணத்தை கொடுத்து விட்டு எதிரிகள் மீது தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் இந்நீதிமன்றத்தை கறை படிந்த கரங்களுடன் அணுகியுள்ளேன் என்றாலும் அதன் காரணமாக தான் புதுக்கோட்டை மலையூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 2 எதிரிகளுமே 100 சதவீதம் கண் பார்வை குறையுடையவர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் எதிரிகளுக்கு 100 சதவீதம் குறைபாடு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த குறைபாடு எதிரிகளுக்கு உள்ளது பற்றி எனக்கு தெரியாது. மலையூர் ரமேஷ் என்பவரை இவ்வழக்கில் சேர்ப்பதற்கு எனக்கு ஆட்சேபனை உண்டா என்றால் அவர் தனக்கும் பிரச்சனைக்கும் சம்பந்தம் இல்லை என்று கூறிவிட்டார். 1ம் எதிரி எந்த காலத்திலும் என்னிடம் பணம் வாங்கவில்லை என்றாலும், அதன் காரணமாக தான் அதற்கான ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய இயலவில்லை என்றாலும் சரியல்ல. நான் வாய் மொழியாக கூறுவதை தவிர்த்து ஆவணம் எதையும் நீதிமன்றத்திலோ போலிசாரிடமோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பணம் கொடுக்கல் வாங்கலுக்கும் வேலை வாங்கி தருவதாக கூறியதற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும்

சரியல்ல. எனது மகனுக்கும், சண்முகம் மகனுக்கும் தனலட்சுமிக்கும் வேலை வாங்கி தருவதாக 1ம் எதிரி எப்போதும் என்னிடம் சொல்லவில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1ம் எதிரி கண்பார்வை குறையுடையவர் என்பதால் அவர் சண்முகம் வீட்டிற்கு வந்து பணம் பெற்றதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2014ம் வருடம் செப்டம்பர் மாதம் 1ம் எதிரி பொன்னேரி வட்டாட்சியராக வேலை பார்க்கவில்லை என்றால் அவர் அவ்வாறு தான் என்னிடம் சொன்னார்.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/—கேசவன்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

R. Senthil Kumar, M.A., B.L., Digitally signed by R. Senthil Kumar, M.A., B.L., Date: 2025.08.20 12:43:20 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி